JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-4 - Witness
for Prosecution

CC No. 294/2025 Crime No. Station

| | | |
|---|---|---|
| Name | PW. 4 குமார் | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tr. Arulkumar, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 22.07.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சொக்கநாதர் மலையூரில் குடியிருந்து கொண்டு, ரோடு போடும் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 07.00 மணியளவில் நான் பவானி மூன்றோடு தாண்டி வந்து கொண்டிருந்தேன். மூன்றோடு தாண்டி உள்ள இளநீர் கடை அருகில் கூட்டமாக இருந்தது. அருகில் சென்று பார்த்தேன். அங்கு விபத்து ஏற்பட்டிருந்தது. விபத்து தொடர்பாக போலீசார் விபத்து நடைபெற்ற இடத்தில் விசாரித்து படம் வரைந்து கொண்டிருந்தார்கள். நானும் அருகில் இருந்தேன். என்னை சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால், நான் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடம் சென்று பார்க்கும் போது, அங்கு எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால், சுமார் 20 நபர்கள் இருந்திருப்பார்கள். சம்பவ இடத்திற்கு அருகில் கடைகள் மற்றும் குடியிருப்புகள் உள்ளது என்றால், சரிதான். இந்த வழக்கில் இறந்த நபர் எனது உறவினர் என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், இந்த வழக்கில் இறந்த நபர் எனது உறவினர் என்றாலும், நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.22 16:51:33 +0530

செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் சம்பவ இடத்தில் பார்க்கும்போது கார் இருந்தது என்றால், சரிதான். மேற்படி காரையும் வரைந்து கொண்டிருந்தார்கள் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தில் கார் இருந்ததாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.22 16:51:39 +0530

Sd/- (J.RAJKUMAR)

**Judicial Magistrate No.1, Bhavani**